வாக்கு வங்கி அரசியலுக்காக இந்தியா கூட்டணி எந்த எல்லைக்கும் செல்லும்

140 கோடி இந்தியர்களும் எனது வாரிசுகள்’: கெஜ்ரிவாலுக்கு பிரதமர் மோடி பதிலடி

புதுடெல்லி, மே.19

140 கோடி இந்தியர்கள்தான் எனது வாரிசுகள் என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

பிரதமர் மோடிக்கு அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் 75 வயது ஆவதால் அவர் ஓய்வு பெற்று விடுவார் என்றும், அடுத்தாக அமித்ஷாதான் பிரதமராவார் எனவும் டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் கூறியிருந்தார். இந்த தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றால் இதுதான் நடக்கும் என அவர் உறுதிபட தெரிவித்து இருந்தார்.

ஆனால் அவரது இந்த கருத்தை அமித்ஷா, ஜே.பி.நட்டா, ராஜ்நாத் சிங் உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் திட்டவட்டமாக மறுத்தனர். மோடிதான் 5 ஆண்டுகளுக்கும் பிரதமராக தொடர்வார் என கூறியிருந்தனர். இந்த விவகாரத்தில் மவுனம் காத்து வந்த பிரதமர் மோடி, நேற்று கெஜ்ரிவாலுக்கு மறைமுகமாக பதிலடி கொடுத்தார்.

டெல்லியில் முதல் முறையாக தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்ற அவர் இது தொடர்பாக கூறியதாவது:–

எனக்கு வாரிசு என்று யாராவது இருந்தால், அது 140 கோடி இந்தியர்கள்தான். அவர்களது ஒளிமயமான எதிர்காலத்துக்காக என்னையே நான் அர்ப்பணித்து இருக்கிறேன்.

எனது ஒவ்வொரு கணமும் நாட்டுக்காகவே. அதன் குடிமக்களின் கனவுகள் மெய்ப்படுவதற்காகவே எனது வாழ்வை அர்ப்பணித்து இருக்கிறேன்.

டெல்லியில் காங்கிரசும், ஆம் ஆத்மியும் சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்து இருக்கின்றன. ஒரு ஊழல் கட்சி மற்றொரு ஊழல் கட்சியை எப்படி பாதுகாக்கிறது என்பதை உலகமே பார்த்துக்கொண்டு இருக்கிறது.

டெல்லியை சீரழிக்க காங்கிரஸ் ஆம் ஆத்மி கூட்டணி முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. அரசியல் தரத்தின் வீழ்ச்சி மற்றும் மக்களின் நம்பிக்கையை உடைப்பதற்கு அதன் தலைவர்களே பொறுப்பு ஆகும்.

ஊழலை அழிக்க வந்தவர்கள் பல ஆயிரம் கோடி ஊழலில் ஈடுபட்டு சிறையை நிரப்புகிறார்கள்.

ஆம் ஆத்மி அரசின் மோசடிகளை அம்பலப்படுத்திய டெல்லி காங்கிரஸ் தலைவர்களே அந்த கட்சியுடன் கைகோர்க்க காந்தி குடும்பத்தால் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

சந்தர்ப்பவாத கூட்டணி

2014ம் ஆண்டு தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி தனது வாக்கு வங்கிக்காக ஓட்டு ஜிகாத்தை ஆதரிப்பவர்களுடன் கைகோர்த்தது. அப்போதைய காங்கிரஸ் அரசு டெல்லியின் முக்கிய இடங்களில் 123 சொத்துகளை வாக்குகளுக்காக வக்பு வாரியத்திடம் ஒப்படைத்தது.

இந்த சொத்துகள் நகரின் முக்கிய இடங்களில் உள்ளன. அவை ஒவ்வொன்றும் கோடிக்கணக்கான மதிப்புடையவை. வாக்கு வங்கி அரசியலுக்காக இந்தியா கூட்டணி எந்த எல்லைக்கும் செல்லும்.

இந்த சந்தர்ப்பவாத கூட்டணியால் வன்முறையை கூட கட்டவிழ்க்க முடியும். குடியுரிமை திருத்தச்சட்டம் அமல்படுத்தப்பட்டதை தொடர்ந்து டெல்லியில் 2020ம் ஆண்டு வெடித்த கலவரத்துக்கு எதிர்க்கட்சிகளே காரணம். வெளிநாடுகளில் கொடுமைகளுக்கு ஆளான ஏராளமான மக்களுக்கு சமீபத்தில் இந்திய குடியுரிமை வழங்கப்பட்டது. இவர்களில் பெரும்பாலானவர்கள் தலித்துகள் ஆவர்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

இந்த நிகழ்ச்சியின்போது குடியுரிமை திருத்தச்சட்டம் மூலம் குடியுரிமை பெற்ற பயனாளிகள் சிலருடன் அவர் கலந்துரையாடினார்.

டெல்லியை போல அண்டை மாநிலமான அரியானாவிலும் பிரதமர் மோடி நேற்று முதல் முறையாக பிரசாரம் மேற்கொண்டார். அங்குள்ள அம்பாலாவில் உரையாற்றிய அவர் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்கியது குறித்து பெருமிதம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், ‘எனது வலிமையான அரசு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370வது சட்டப்பிரிவு எனும் சுவரை உடைத்தது. அதன் பலனாக காஷ்மீர் இன்று வளர்ச்சியின் பாதையில் அடியெடுத்து வைத்து உள்ளது’ என்று தெரிவித்தார்.

இதைப்போல தனது அரசின் சாதனைகளை பட்டியலிட்ட பிரதமர் மோடி, காங்கிரஸ் கட்சியின் ஊழல்களையும் பட்டியலிட்டு வாக்காளர்களை கவர்ந்தார்.

நாடாளுமன்ற தேர்தலையொட்டி இதுவரை ரூ.8,890 கோடி பணம், பொருள் பறிமுதல்

அதிகபட்சமாக குஜராத்தில் ரூ.1,461 கோடி சிக்கியது

புதுடெல்லி, மே.19

நாடாளுமன்ற தேர்தலையொட்டி இதுவரை ரூ.8,890 கோடி மதிப்புக்கு ரொக்கப்பணம், நகைகள், மதுபானம் உள்ளிட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

இந்த தேர்தலில் தேர்தல் கமிஷன் மேற்கொண்ட நடவடிக்கையில் இதுவரை இல்லாத அளவுக்கு பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன.

தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து கடந்த ஏப்ரல் மாதம் 13ந் தேதி வரை தேர்தல் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ரூ.4,658 கோடி அளவுக்கு பணம், இலவச பொருட்கள் மற்றும் மது உள்ளிட்ட போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு இருந்தன.

இந்நிலையில் நேற்று வரை பறிமுதல் செய்யப்பட்ட பணம், பொருட்கள் பற்றிய புள்ளி விவரத்தையும் தேர்தல் கமிஷன் வெளியிட்டு உள்ளது.

இதன்படி 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ரூ.849.15 கோடி ரொக்கப்பணம், ரூ.814.85 கோடி மதிப்புள்ள மதுபானங்கள், ரூ.3,958.85 கோடி மதிப்புள்ள பிற போதைப்பொருட்கள், ரூ.1,260.33 கோடி மதிப்புள்ள நகைகள், ரூ.2,006.56 கோடி மதிப்புள் இலவசங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன.

இவற்றின் மொத்த மதிப்பு ரூ.8,889 கோடியே 74 லட்சம் ஆகும்.

மாநிலங்கள் வாரியாக அதிகபட்சமாக குஜராத் மாநிலத்தில் ரூ.1,461 கோடியே 73 லட்சம் மதிப்புக்கு பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. இதனையடுத்து ராஜஸ்தானில் ரூ.1,133 கோடியே 82 லட்சத்துக்கும், மராட்டிய மாநிலத்தில் ரூ.685.81 கோடிக்கும், டெல்லியில் ரூ.653.31 கோடிக்கும், கர்நாடகத்தில் ரூ.554.41 கோடிக்கும், தமிழ்நாட்டில் ரூ.543.72 கோடிக்கும் பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன.

தமிழ்நாட்டில் ரூ.69 கோடியே 59 லட்சம் ரொக்கப்பணமும், ரூ.330 கோடியே 91 லட்சம் போதைப்பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த பறிமுதலில் குஜராத்தில் கடலில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களும் அடங்கும்.

அனுமதி கிடைக்காததால்

நாகை–இலங்கை பயணிகள் கப்பல் போக்குவரத்து ரத்து: பயண கட்டணத்தை திரும்ப வழங்க ஏற்பாடு

நாகப்பட்டினம், மே.19–

அனுமதி கிடைக்காததால் நாகை–இலங்கை இடையேயான கப்பல் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. பயண கட்டணத்தை திரும்ப வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

நாகையில் இருந்து இலங்கை காங்கேசந்துறைக்கு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 14ந்தேதி முதல் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது.

வடகிழக்கு பருவமழை காரணமாக அக்டோபர் மாதம் 23ந்தேதி அதன் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதையடுத்து நாகையில் இருந்து இலங்கை காங்கேசந்துறைக்கு சென்ற 13ந்தேதி முதல் மீண்டும் ‘‘சிவகங்கை’’ என்ற பெயரில் புதிய கப்பல் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பின்னர் தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த பயணிகள் கப்பல் போக்குவரத்து 17ந்தேதிக்கு

மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதே காரணங்களை காட்டி மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து 19ந்தேதிக்கு மாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று அந்த கப்பலை இயக்கும் தனியார் நிறுவனம் ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. அதில், தவிர்க்க முடியாத காரணத்தால் நாகை–காங்கேசந்துறை பயணிகள் கப்பல் போக்குவரத்தை இயக்க முடியவில்லை. மிக விரைவில் புதிய பயண தேதிகள் அறிவிக்கப்படும்.

இதுவரை பயணச்சீட்டை பெற்றவர்கள் கட்டணம் முழுமையாக மீண்டும் பெற ஏற்பாடுகள் செய்துள்ளோம். மேலும் விவரங்களுக்கு customer.care@sailindsri.com என்ற இணையதள முகவரியை பார்த்து தெரிந்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளது.

அந்தமானில் இருந்து சென்னை வந்த சிவகங்கை என்ற பெயர் கொண்ட கப்பல் நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசந்துறைக்கு செல்ல சர்வதேச போக்குவரத்திற்கான சட்டபூர்வமான அனுமதி கிடைப்பதில் தொடர்ந்து சிக்கல் இருப்பதாக கூறப்படுகிறது.

மேலும் பாதுகாப்பு குறைபாடுகள் காரணமாகவும், அதை சரி செய்ய காலதாமதம் ஏற்படுவதால் சர்வதேச அனுமதி வழங்க முடியவில்லை என அரசுதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து 3வது முறையாக நாகை–இலங்கை பயணிகள் கப்பல் சேவையில் தேதி மாற்றப்பட்டு தற்போது தேதி அறிவிக்காமல் திடீரென ரத்து செய்யப்பட்டு இருப்பது பயணிகள் இடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

‘பிரதமர் மோடி என்னுடன் விவாதிக்க வரமாட்டார்’: கேள்விகளுக்கு அவரால் பதிலளிக்க முடியாது

ராகுல்காந்தி உறுதி

புதுடெல்லி, மே.19

தனது கேள்விகளுக்கு பிரதமரால் பதிலளிக்க முடியாது என்பதால், அவர் தன்னுடன் விவாதிக்க வரமாட்டார் என ராகுல்காந்தி கூறியுள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி நேற்று டெல்லியில் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது டெல்லியில் உள்ள 7 தொகுதிகளையும் இந்தியா கூட்டணி வெல்வதற்கு காங்கிரஸ், ஆம் ஆத்மி தொண்டர்கள் உழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் பிரதமர் மோடி மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்தினார்.

பிரச்சாரத்தின்போது அவர் கூறியதாவது:– அரசியலமைப்பை அழிப்பவர்களிடம் இருந்து அதை காப்பாற்றுவதே அனைவரின் முதல் நோக்கமாக இருக்க வேண்டும். இதற்காகவே ஆம் ஆத்மியுடன் கூட்டணி வைத்துள்ளோம். டெல்லியில் 3 தொகுதிகளில் காங்கிரசுக்கும், 4 தொகுதிகளில் ஆம் ஆத்மிக்கும் வாக்களிக்குமாறு காங்கிரஸ் தொண்டர்களை கேட்டுக்கொள்கிறேன். இதைப்போல ஆம் ஆத்மி தொண்டர்களும் 4 தொகுதிகளில் தங்கள் தலைவர்களுக்கும், 3 தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கும் வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த தேர்தலில் நான் ஆம் ஆத்மிக்கு வாக்களிப்பதும், அரவிந்த் கெஜ்ரிவால் காங்கிரசுக்கு ஓட்டு போடுவதும் சுவாரசியமாக இருக்கும்.

பிரதமர் மோடி தனக்கு பிடித்தமான சில செய்தியாளர்களுக்கு இடைவிடாமல் பேட்டி கொடுக்கிறார். ஆனால் என்னுடன் விவாதிக்க அவர் வரமாட்டார். ஏனெனில் எனது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாது என்பது அவருக்கு தெரியும்.

அதானி–அம்பானியிடம் இருந்து காங்கிரஸ் கட்சி வேன்களில் பணம் பெற்றதாக பிரதமர் பேசினார். ஆனால் இது குறித்து விசாரணை நடத்த அவருக்கு துணிச்சல் இல்லை.

மோடியுடன் நான் எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் விவாதம் செய்ய தயாராக இருக்கிறேன். ஆனால் அவர் வரமாட்டார் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும்.

மோடியிடம் நான் கேட்கும் முதல் கேள்வி, அதானிக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு என்பதுதான்? அடுத்ததாக தேர்தல் பத்திரங்கள் பற்றியும் அவரிடம் கேட்க விரும்புகிறேன். இந்த 2 கேள்விகளிலேயே விவாதம் முடிவுக்கு வந்து விடும். ஆனாலும் கொரோனா தொற்றுநோயால் மக்கள் அவதிப்படும்போது, பொதுமக்களை தட்டுகளை தட்டுவதற்கும் மற்றும் மொபைல் போன்களில் டார்ச் அடிக்கவும் ஏன் சொன்னார் என்றும் பிரதமரிடம் கேட்க விரும்புகிறேன்.

நான் எழுப்பும் பிரச்சினைகளை பொதுக்கூட்டங்களில் மட்டும் பேசுவார். அதானிஅம்பானி குறித்து ஏன் பேசவில்லை என்று நான் கேட்ட உடனே, அது குறித்து பேசினார்.

மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அக்னிவீரர் திட்டத்தை குப்பைத்தொட்டியில் வீசுவோம். சிறு வணிகர்களுக்கு உதவும் வகையில் ஜி.எஸ்.டி.யை எளிமையாக்குவோம்.

இவ்வாறு ராகுல் காந்தி கூறினார்.

அயலக தமிழர் நலவாரிய உறுப்பினராக சேர பதிவுக்கட்டணம் செலுத்த ஆகஸ்ட் 15ந்தேதி வரை விலக்கு

சென்னை, மே.19–

அயலக தமிழர் நல வாரியத்தில் உறுப்பினர் ஆவதற்கு வருகிற ஆகஸ்டு 15ந் தேதி வரை பதிவுக்கட்டண செலுத்த விலக்கு அளிக்கப்படுவதாக அயலக தமிழர் நலத்துறை ஆணையரகம் அறிவித்துள்ளது.

அயலகத் தமிழர் நலத்துறை ஆணையரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வேலைவாய்ப்பு, கல்வி, வணிகம் போன்ற காரணங்களுக்காக தமிழர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வது சமீப காலங்களில் அதிகரித்துள்ளது. இவ்வாறு புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர்களின் நலன் காக்க முதல் அமைச்சரின் ஆணை ‘அயலக தமிழர் நல வாரியம்’ அமைக்கப்பட்டுள்ளது.

18 முதல் 55 வயது வரை உள்ள அயலக தமிழர்கள், அயலக தமிழர் நலத்துறையின் வலைதளத்தில் (https://nrtamils.tn.gov.in) ஒரு முறை பதிவு கட்டணமாக ரூ.200 செலுத்தி அயலக தமிழர் (வெளிநாடு) மற்றும் அயலக தமிழர் (வெளிமாநிலம்) பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் வாரியத்தில் உறுப்பினராக இணைந்து அடையாள அட்டையை பெறலாம்.

உறுப்பினர் பதிவை ஊக்குவிக்கும் விதமாக 15.5.2024 முதல் 15.8.2024 வரையிலான 3 மாதங்களில் பதிவு செய்யும் நபர்களுக்கு பதிவு கட்டணம் ரூ.200 செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

அயலக தமிழர் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள நபர்களுக்கு விபத்து காப்பீடு, தீவிர மற்றும் தொடர் சிகிச்சை தேவைப்படும் நோய்களுக்கான காப்பீடு, கல்வி உதவித்தொகை திட்டம், திருமண உதவித்தொகை திட்டம் உள்ளிட்ட நலத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

அயலக தமிழர் நல வாரியத்தில் உறுப்பினர் ஆதல் மற்றும் மேற்காணும் திட்டங்கள் குறித்த கூடுதல் விளக்கங்களை 18003093793 (இந்தியாவிற்குள்), 8069009901 (வெளிநாடுகளில் இருந்து தொடர்புக்கு), 8069009900 (மிஸ்டு கால்) என்ற கட்டணமில்லா உதவி எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

மேலும், வெளிநாடுகளுக்கு செல்லும் தமிழர்களுக்கு அவர்களுக்கான பாதுகாப்பான, சட்டப்பூர்வமான, முறையான இடப்பெயர்வை உறுதி செய்ய முன் பயண புத்தாக்க பயிற்சியானது தஞ்சாவூர், ராமநாதபுரம், பெரம்பலூர், கன்னியாகுமரி, சிவகங்கை, விழுப்புரம், புதுக்கோட்டை ஆகிய 7 மாவட்டங்களில் அளிக்கப்படுகிறது.

இதில், தஞ்சாவூர், ராமநாதபுரம், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களுக்கு சந்தானம் (86104 64077, 97915 25231) என்பவரையும், கன்னியாகுமரி, சிவகங்கை, விழுப்புரம் மாவட்டங்களுக்கு வளர்மதி (99401 97583, 82200 24967) என்பவரையும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தெய்வானை (96885 20300) என்பவரையும் தொடர்பு கொள்ளலாம்.

இது தவிர, வெளிநாடு தமிழர்களுக்கான புகைப்பட அடையாள அட்டைக்கு பதிவு செய்யும் முறை மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பான விரிவான தகவல்களுக்கு அயலக தமிழர் நலத்துறை ஆணையரக வலைதளத்தினை (https://nrtamils.tn.gov.in) பார்க்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தினசரி ஊதியம் தமிழகத்தில் ரூ.319 ஆக உயர்வு

சென்னை, மே.19–

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் தினசரி ஊதியத்தை தமிழகத்தில் ரூ.294ல் இருந்து ரூ.319 ஆக உயர்த்தி கடந்த ஏப்ரல் மாதம் முதல் அமல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ஊதியம் வழங்குவதற்காக இந்த ஆண்டுக்கு ரூ.1,229.04 கோடி நிதியை ஒதுக்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்த அரசாணையை ஊரக வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செந்தில்குமார் சமீபத்தில் வெளியிட்டு இருந்தார்.

அதில், 2024–25ம் ஆண்டில் தமிழகத்திற்கு 20 கோடி மனித நாட்களை அனுமதிக்கும் மத்திய தொழிலாளர் பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வேலையாள் ஒருவருக்கு நாளொன்றுக்கு ரூ.319 ஊதியம் வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த திட்டத்தில் இருந்த நிலுவைத் தொகை உள்பட ரூ.921.78 கோடி நிதியை தமிழகத்துக்கு கடந்த மத்திய அரசு ஒதுக்கியது. மத்திய அரசின் அந்த 75 சதவீதம் நிதியான ரூ.921.78 கோடியுடன், மாநில அரசின் 25 சதவீத நிதி ரூ.307.26 கோடி நிதியை சேர்த்து ரூ.1,229 கோடியை பயன்படுத்த ஒப்புதல் அளித்து அரசாணை வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட ஊதிய உயர்வு குறித்து ஊரக வளர்ச்சித்துறை முதன்மை செயலாளர் செந்தில்குமார் மற்றொரு அரசாணையை பிறப்பித்துள்ளார். அதில், தமிழகத்தில் இந்த திட்டத்திற்கான தினசரி ஊதியம் ரூ.294ல் இருந்து ரூ.319 ஆக உயர்த்தப்படுகிறது. இந்த ஊதிய உயர்வு கடந்த ஏப்ரல் மாதம் 1ந்தேதி முதல் அமல்படுத்தப்படும். இந்த ஊதியம் வேலையாட்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

CHANGE OF NAME

I B Swapna Vijay Kumar Alias Swapna Vijaykumar Alias Swapna B D/o Nalappa Annareddy and W/o Bommu Vijay Kumar R/o 8(91), Asta Arise, Wing-B Flat No-B15B, 15th Floor, CP Ramasami Road, Alwarpet, Teynampet, POteynamet, DIST, Chennai, Tamil Nadu-600018, have changed my name to B Swapna Vijay Kumar Alias Swapna Vijaykumar Alias Swapna B

சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்

CIN - U55209TN2018PLC122598

பதிவு அலுவலகம்: எப்1 சி3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை – 600 117, தமிழ்நாடு

Tel. No. - 044-29871174, Email Id - cs@shilindore.com , Website:www.shilindore.com

31 மார்ச், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(இந்திய ரூபாயில் லட்சத்தில் இபிஎஸ் தவிர)

வ. எண்	விவரங்கள்	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு	
		31.03.2024 (தணிக்கை யானது)	31.03.2023 மீண்டும் கூறப்பட்டது	31.03.2024 (தணிக்கை யானது)	31.03.2023 மீண்டும் கூறப்பட்டது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் (நிகரம்)	2743.38	2,926.45	9669.77	9982.65
2	காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் முன்)	523.21	526.71	933.33	1399.00
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	523.21	526.71	933.33	1399.00
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் /(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள் பின்)	484.69	391.40	718.41	1039.69
5	காலத்திற்கான மொத்த பரிபூரண வருமானம் /(நஷ்டம்) (காலத்திற்கான லாபம் (வரிக்கு பின்) மற்றும் இதர பரிபூரண வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	478.22	380.65	694.92	1028.94
6	சமபங்கு மூலதனம்	304.66	304.66	304.66	304.66
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.				
8	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/–) (தொடர் மற்றும் நிறுத்தப்பட்ட செயல்பாடுகள்)				
	அடிப்படை	15.91	12.85	23.58	34.13
	டைலூடட்	15.91	12.85	23.58	34.13

குறிப்பு

அ. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 31 மார்ச், 2024–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.shilindore.com–ல் உள்ளது.

குழு உத்தரவுப்படி
சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
T.N. உன்னி
சேர்மன்

இடம்: இந்தூர்
தேதி: 18.05.2024

சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்

(CIN: U55209TN2018PLC122598)

பதிவு அலுவலகம்: எப்1, சி3, சிவவேல் அபார்ட்மெண்ட், 2 அழகப்பா நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை, தமிழ்நாடு – 600 117,
போன்: 044-29871174 |
Email:Email: cs@shilindore.com
Website: www.shilindore.com

அறிவிப்பு

நிறுவனத்தின் பட்டியலிடப்படாத முன்னுரிமைப் பங்குகளுக்கான ஈவுத்தொகையின் அறிவிப்பு, பதிவு தேதி மற்றும் புத்தக மூடல்

மே 18, 2024 அன்று நடைபெற்ற நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில், நிறுவனத்தின் பட்டியலிடப்படாத முன்னுரிமைப் பங்குகளுக்கு ஈவுத்தொகையை வழங்க பரிந்துரைக்கப் பட்டுள்ளது என்பதை இதன்மூலம் அறிவிக்கிறோம். பதிவுத் தேதியான ஜூன் 3, 2024 அன்று நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர் பதிவேடுகளில் பெயர்கள் இடம் பெற்றுள்ள முன்னுரிமை பங்குதாரர்களுக்கு ஈவுத்தொகை வழங்கப்படும் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 2013இன் பிரிவு 91இன் படி, இந்த நோக்கத்திற்காக உறுப்பினர்களின் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் மே 28, 2024 முதல் ஜூன் 2, 2024 வரை (இரண்டு நாட்களையும் உள்ளடக்கி) மூடப்பட்டிருக்கும்.

மேற்கண்ட தகவல்கள் நிறுவனத்தின் இணையதளத்திலும் (www.shilindore.com) மற்றும் பங்குச் சந்தையின் இணையதளத்திலும் அதாவது பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) ஆகியவற்றிலும் கிடைக்கும்.

குழு உத்தரவின்படி
சாயாஜி ஹோட்டல்ஸ் (இந்தூர்) லிமிடெட்
ஒப்பம்/–
ரவூப் ரசாக் தனானி (இயக்குனர்)
DIN: 00174654

நாள்: 18.05.2024 | இடம்: இந்தூர்